# கிண்ணியா நகர சபை

-----------------------------------------

## திருகோணமலை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

-----------------------

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

------------------------------------------------------

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 13 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 05 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 30 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

--------------------------------------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிண்ணியா நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

---------------------------------------------

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சபைக்கு நன்கொடையாக கிடைக்கப்பெற்று சபையின் பெயரில் காணப்படும் டிப்பர் மற்றும் JCB என்பவற்றின் பெறுமதி முறையே ரூபா 6,009,602 , ரூபா 17,649,179 தொகைகள் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புறநெகும செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா.1,508,212 பெறுமதிக்கு நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்ட சுற்றுலா விடுதி நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளமையினால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சின்னக் கிண்ணியா மீன் சந்தை குத்தகை நிலுவையானது பேரேட்டின் படி ரூபா 1,770,000 ஆக உள்ள போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 770,000 எனக் காட்டப்பட்டமையினால் மீன் சந்தையின் குத்தகை நிலுவை ரூபா 1,000,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பேரேட்டின்படி கடன் கொடுத்தோர் மீதியானது 2015 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 1,541,751 தொகையாக உள்ள போதிலும் அத்திகதியில் உள்ளவாறான ஐந்தொகையில் இம் மீதியானது ரூபா 1,470,143 வரவு மீதியாகக் காட்டப்பட்டமையினால் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 3,011,894 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) பேரேட்டின் படி 2015 திசெம்பர் 31 இல் ஒப்பந்தகாரர் வைப்புக்கள் ரூபா 7,117,166 ஆகக் காணப்பட்ட போதிலும் அத்திகதியில் இம்மீதியானது நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 6,757,166 ஆகக் காட்டப்பட்டமையினால் ஒப்பந்தகாரர் வைப்பு ரூபா 360,000 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 255 | |
| 177(2) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் சுருக்கத்தை பொது மக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு சபையால் 2016 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 880 | காசு மற்றும் களஞ்சியம் தொடர்பாக நிர்வாக ரீதியாக பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட ஐந்து உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணைகள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதி அமைச்சின் சுற்றறிக்கை இல 04/2015 | அரச நிறுவனங்கள் வாகனங்களிற்கான காப்புறுதிப் பத்திரத்தை காப்புறுதி முகவர்கள் ஊடாக பெறுதலாகாது என்ற போதிலும் சபையின் நான்கு வாகனங்களுக்கான காப்புறுதிப் பத்திரங்கள் காப்புறுதி முகவர்கள் ஊடாக பெறப்பட்டிருந்தது. |

1.3.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்

இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 11.6 இன் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவருக்கு 12 மாத காலத்திற்கு ஒரு தடவை மாத்திரமே விழா முற்பணம் வழங்கப்படலாம் என்ற போதிலும் சபையினால் ஒரு ஊழியருக்கு மீளாய்வாண்டின் போது இரண்டு தடவைகள் விழா முற்பணம் வழங்கப்பட்டிருந்தன.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நகர சபையின் செயற்பாடுகள் ரூபா 925,243 மீண்டு வரும் செலவினத்திற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செயற்பாடுகள் ரூபா 2,813,401 தொகையான வருமானத்திற்கு மிகையான செலவினத்தினை விளைவித்திருந்தது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான வருமான நிலுவைகள் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | அறவீடு செய்யப்பட்டது | திரண்ட நிலுவை 31.12.2015 |
|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீத வரிகள் | 3,927 | 1,455 | 1,742 |
| குத்தகை | 10,944 | 3,873 | 11,340 |

2.2.2 வருமான முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக நிலுவையாகவுள்ள இறைச்சிக்கடை குத்தகை ரூபா 2,947,185 தொகையையும் மீன் சந்தை குத்தகை ரூபா 7,103,122 தொகையைமாக ரூபா 10,050,307 மொத்த தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக நிலுவையாக உள்ள வாராந்த சந்தைக் குத்தகைப் பணமாகிய ரூபா 349,722 தொகையையும், கோழி இறைச்சிக் கடைகளின் குத்தகைப் பணமாகிய ரூபா 17,666 தொகையையும் அறவிடுவதற்கு சபை மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 160ஆம் பிரிவுக்கு அமைய, நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு இறுதி வரை நிலுவையாகவுள்ள ரூபா 1,741,969 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணம்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தனியார் நிறுவனங்களால் நிறுவப்பட்ட 04 தொலைத் தொடர்பு கோபுரங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றிடமிருந்து 2013 ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 06 வாகனங்கள் 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது நிர்வாக அமைச்சின் 09/2009 இலக்க 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர்களின் வருகையைப் பதிவு செய்வதற்காக நேரப்பதிவு இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் முச்சக்கர வண்டி மீளாய்வாண்டின் போது ஓட்டப் பதிவேட்டில் பதிவு செய்யாது 868 கிலோமீற்றர் பயணம் செய்திருந்தது.

(ஈ) சபையினால் பாவிக்கப்படும் 16 வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கு பொருத்தமான ஒரு வாகனத் தரிப்பித்தை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படாமையால் அவ் வாகனங்களுக்கான பாதுகாப்பு மற்றும் சேதமடைதல் ஆபத்து காணப்படுகின்றது.

(உ) மீளாய்வாண்டில் ரூபா 48,025 தொகை செலவு செய்து ஆரம்பிக்கப்பட்ட இணையத்தளம் செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற போதிலும் இதனை செயற்படுத்துவதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் நிதியளிப்பின் கீழ் 2008 ஆம் ஆண்டு நகரசபைக்கு வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட 26 தையல் இயந்திரங்களில் 12 தையல் இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் பயனற்றுக் காணப்படுகின்ற போதிலும் அவற்றைத் திருத்திப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஓய்வூதிய திணைக்களத்தின் 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 02/2011 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் உள்@ராட்சி நிறுவனங்களில் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்தப்படுதல் வேண்டும். எனினும் இதற்கு மாற்றமாக சபையில் கடமையாற்றிய ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்குப் பதிலாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களுக்கும் பங்களிப்புச் செய்யப்பட்டதுடன் 2012 சனவரி தொடக்கம் 2015 ஏப்ரல் வரை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்புப் பணத்தையும், 2014 மார்ச் தொடக்கம் 2015 பெப்ரவரி மாத காலத்திற்கான ஊழியர் சேமலாப நிதியத்துக்கான பங்களிப்புப் பணத்தையும் குறித்த காலத்தில் செலுத்தாத காரணத்தினால் அந்நிதியங்களுக்கும் ரூபா 482,710 தொகை தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பொது நூலகம், பொதுச் சந்தை, மற்றும் மீன்சந்தைகளின் நீர்க் கட்டணங்களை உரிய காலத்தில் செலுத்தத் தவறியமையினால் துண்டிக்கப்பட்ட நீர் இணைப்புக்களை மீளப்பெறுவதற்கான தண்டப்பணமாக ரூபா 59,946 தொகை சபை நிதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது.

3.3 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்து

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2012 ஆம் ஆண்டில் ரூபா 219,254 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 51 கூட்டுப்பசளை தயாரிக்கும் தொட்டிகளில் ரூபா 150,465 பெறுமதியான 35 தொட்டிகள் குறித்த நோக்கத்திற்கு வழங்கப்படாது களஞ்சியத்தில் 04 வருடங்களாக காணப்படுகின்றது.

(ஆ) சபையில் காணப்படும் 03 மோட்டார் வாகனங்கள் மற்றும் ரூபா.5,098,000 பெறுமதியான டிப்பர் ஒன்றும் கடந்த நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

4. மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

2015 திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியணியினர் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | மிகை | பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 02 | -- | -- | 02 |
| உதவியாளர்கள் | 40 | 30 | -- | 10 |
| சிற்றூழியர்கள் | 67 | 73 | 06 | -- |
| தற்காலிக நாட்கூலி ஊழியர்கள் | -- | 14 | 14 | -- |
| மொத்தம் | 109 | 117 | 20 | 12 |

சபையின் செயலாளர் பதவியும், கணக்காளர் பதவியும் கடந்த ஆறு வருடகாலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படவில்லை. |
| | (ii) சொத்துக்கள் செலவீனங்களின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்படவில்லை. |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |